# யாழ்ப்பாண அரசுகால பொருளாதார நடவடிக்கைகளில் இஸ்லாமியர்களின் வகிபாகம் - ஒரு வரலாற்றுப் பார்வை

**க. அருந்தவராஜா**

*வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
arunn.msu@gmail.com

***ஆய்வுச் சுருக்கம்***

*யாழ்ப்பாணப் பிரதேமானது தனக்கெனத்தொரு நீண்டவரலாற்றுப் பாரம்பரியத்தினைக் கொண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட, பல்லினச் சமூகத்தினை உள்ளடக்கியுள்ள இப்பிரதேசத்தில், இஸ்லாமிய மக்களுக்கென இச்சமூகத்தில் தனியானதொரு சிறப்பும் அவர்களுக்கென நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியமும் உண்டென்பதனையும் மறுப்பதற்கில்லை. இவர்கள் இலங்கையில் தனியானதொரு இனக்குழுவினராகக் காணப்பட்டபோதும் தமிழையே பெருமளவிற்குத் தங்களது தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இஸ்லாமியர்களது வருகை, அவர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் தொடர்பாகப் பல்வேறு கருத்து முரண்பாடுகள் காணப்படாலும்கூட யாழ்ப்பாணத்துத் தமிழ் அரசர்களது காலத்துடன்தான் இவர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் நல்லூரினை அண்டிய பிரதேசங்களில் காணப்பட்டமைக்கான ஆதாரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் வர்த்தக நோக்குடனேயே இப்பகுதிக்கு வந்த இவர்கள் காலப்போக்கில் நிரந்தரக் குடிகளாக மாறிக்கொண்டனர். மேலும் இவர்களது குடியேற்றங்கள் தொடக்க காலங்களில் யாழ்ப்பாணத்தில் நல்லூர், சாவகச்சேரி, மிருசுவில், எழுதுமட்டுவாள், கொடிகாமம், ஆனைக்கோட்டை, பருத்தித்துறை போன்ற பிரதேசங்களில் காணப்பட்டமைகான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஐரோப்பியர்களது வருகைக்கு முன்னதான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் யாவுமே யாழ்ப்பாண அரசர்களது மேற்பார்வையில் இவர்களது கட்டுப்பாட்டின் கீழேயே காணப்பட்டிருந்தது. இவர்கள் உள்நாட்டில் பல்வேறு தொழில்களைச் செய்தும் அரசினது வருவாய்க்குப் பக்கபலமாகவும் திகழ்ந்தனர். பலர் விவசாயிகளாகவும் மீனவர்களாகவும் இருந்துள்ளனர். சிலர் இங்கிருந்து பாதுகாப்புக் காரணங்களுக்காகச் சென்று, வாசனைப்பொருட்கள் வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். இஸ்லாமியர்கள் மன்னார், வன்னிப் பிரதேசங்களில் யானைகளைப் பிடிப்பதும் அவற்றினை யாழ்ப்பாண அரசர்களுக்கு வழங்குவதும், விற்பனை செய்வதனையும் பரம்பரையாகச் செய்துவந்தனர். குதிரைகளைக் கொடுத்து யானைகளைப் பரிமாற்றம் செய்கின்ற பண்டமாற்றிலும் ஈடுபட்டனர். மேலும் யாழ்ப்பாணத்தில் இவர்களது பாரம்பரிய தொழில்களிலொன்றாக அக்காலப்பகுதியில் காணப்பட்ட மற்றொரு தொழிலான முத்துக்குளித்தல் காணப்பட்டது. இஸ்லாமியர்களில் பலர் முத்துக் குளிப்பவர்களாகவும் படகோட்டிகளாகவும் காணப்பட்ட அதேநேரத்தில் முத்து விற்பனையிலும் ஈடுபட்டு அதிகளவு இலாபத்தினைப் பெற்றனர். யாழ்ப்பாண அரசர்களுக்கு இவர்கள் தாம் பெற்ற வருவாயில் குறிக்கப்பட்டளவினைத் திறையாகச் செலுத்தினரென்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் முழுக்க முழுக்க வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்த இவ்வாய்வின் ஊடாக அக்கால யாழ்ப்பாண இஸ்லாமிய மக்களது பொருளாதார நடவடிக்கைகளின் தன்மைகளை இனங்காண்பதும், அது யாழ்ப்பாண அரசின் வளர்ச்சிக்கு எவ்விதத்தில் பங்களிப்புச் செய்திருந்ததென்பதனையும், வருங்கால ஆய்வாளர்களுக்கு இவ்விடயமாக மேலதிக தகவல்களை வழங்கி ஆவணப்படுத்துவதனையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. மேலும் இப்பகுதியில் எவரும் வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் விரிவாகச் செல்லவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. ஆய்வில் முதற்தர மற்றும் இரண்டாந்தர ஆதாரங்கள் ஆய்வின் தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதற்தர ஆதாரங்களில் யாழ்ப்பாண அரசர்கால இலக்கியங்கள்,*

*குறிப்புக்கள், ஐரோப்பியர்கால அறிக்கைகள், குறிப்புக்கள், கடிதங்கள் போன்றன பிரதான இடத்தினைப் பிடித்துள்ளன. முதற்தர ஆதாரங்கள் சிலவற்றினை அடிப்படையாக வைத்துப் பிற்பட்ட காலங்களில் எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள் என்பனவும் இணையத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களும் இரண்டாந்தர ஆதாரங்கள் வரிசையில் உள்ளடங்குகின்றன. இவ்வாய்வில் எதிர்கொண்ட முக்கியமான பிரச்சினை யாதெனில் இஸ்லாமியர்களைப் பற்றி எழுத இஸ்லாமியர்கள் பக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட முதற்தர ஆதாரங்கள் மிகவும் குறைவாகக் காணப்பட்டதென்பதே. பொதுப்படப் பார்க்குமிடத்து அக்கால யாழ்ப்பாண அரசுகால பொருளாதார நடவடிக்கைகளில் இஸ்லாமியர்களின் பங்கானது குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு அமைந்திருந்ததெனலாம். இன்னும் சொல்லப்போனால் அக்கால யாழ்ப்பாணப் பொருளாதாரத்தின் தூண்களாகவும் இவர்களைக் கொள்ளலாம்.*

***பிரதான சொற்பதங்கள்*** *: ஆரம்பகால இஸ்லாமியக் குடியேற்றங்கள், பண்டமாற்று வர்த்தகம், முத்துக்குளித்தல், யானை வர்த்தகம*

**அறிமுகம்**

ஐரோப்பியர்களது வருகைக்கு முன்னதான காலப்பகுதியில் அதாவது யாழ்ப்பாண அரசர்களது காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தினது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவிற்கு யாழ்ப்பாண அரசர்களது மேற்பார்வையில் இஸ்லாமியர்களது கட்டுப்பாட்டின் கீழேயே காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் உள்நாட்டில் பல்வேறு தொழில்களைச் செய்தும், யாழ்ப்பாண அரசினது வருவாய்க்குப் பக்கபலமாகவும் திகழ்ந்தனர். பலர் விவசாயிகளாகவும் மீனவர்களாகவும் இருந்துள்ளனர். சிலர் இங்கிருந்து பாதுகாப்புக் காரணங்களுக்காக மலைநாடு சென்று வாசனைப்பொருட்களது வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். இஸ்லாமியர்கள் மன்னார், வன்னிப் பிரதேசங்களில் யானைகளைப் பிடிப்பதும் அவற்றினை யாழ்ப்பாண அரசர்களுக்கு வழங்குவதனையும் விற்பனை செய்வதனையும் பரம்பரையாகச் செய்துவந்தனர். குதிரைகளைக் கொடுத்து யானைகளைப் பரிமாற்றம் செய்கின்ற பண்டமாற்றிலும் ஈடுபட்டனர். மேலும் யாழ்ப்பாணத்தில் இவர்களது பாரம்பரிய தொழில்களிலொன்றாக அக்காலப்பகுதியில் காணப்பட்ட மற்றொரு தொழில் முத்துக்குளித்தல் என்பதாகும். இஸ்லாமியர்களில் பலர் முத்துக் குளிப்பவர்களாகவும் படகோட்டிகளாகவும் காணப்பட்ட அதேநேரத்தில் முத்து விற்பனையிலும் ஈடுபட்டு அதிகளவு இலாபத்தினைப் பெற்றனர். யாழ்ப்பாண அரசர்களுக்கு இவர்கள் தாம் பெற்ற வருவாயில் குறிக்கப்பட்டளவினைத் திறையாகச் செலுத்தினரென்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் யாழ்ப்பாண அரசுகால பொருளாதார நடவடிக்கையில் இவர்களது பங்களிப்பும் போற்றத்தக்கன.

**யாழ்ப்பாணமும் இஸ்லாமியர்களும்**

யாழ்ப்பாணப் பிரதேமானது தனக்கெனத்தொரு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தினைக் கொண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றமையினை இலக்கியங்களும் அப்பிரதேசங்களில்

மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொல்லியல் ஆய்வுகளும் எடுத்தியம்புகின்றன. அவ்வகையில் தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட, பல்லினச் சமூகத்தினை உள்ளடக்கியுள்ள யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இஸ்லாமிய மக்களுக்கென இச்சமூகத்தில் தனியானதொரு சிறப்பும் அவர்களுக்கென நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியமும் உண்டென்பதனையும் மறுப்பதற்கில்லை. யாழ்ப்பாணத்தில் இஸ்லாமியர்களது வருகை, அவர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் என்பவை தொடர்பாகப் பல்வேறு கருத்து முரண்பாடுகள் அறிஞர்களிடையிலே காணப்படாலும்கூட யாழ்ப்பாணத்துத் தமிழ் அரசர்களது காலத்துடன்தான் இவர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் நல்லூரினை அண்டிய பிரதேசங்களில் காணப்பட்டமைக்கான ஆதாரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. *(அருந்தவராஜா, க.,2012)* இலங்கைக்கும் அராபியர்களுக்கும் இடையிலான தொடர்புகள் இஸ்லாத்தின் எழுச்சிக்கு முன்னதாகவே ஏற்பட்டிருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன. இத்தகைய தொடர்புகள் அனைத்தும் வர்த்தகத்தினை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்பட்டன. இதற்கு யாழ்ப்பாணமும் விதிவிலக்காக அமையவில்லை. இருப்பினும் இஸ்லாமியர்கள் என்ற வகையில் யாழ்ப்பாணத்திற்கும் இவர்களுக்கும் இடையிலான தொடர்புகள் கி.பி 8ஆம் நூற்றாண்டின் பின்னதாகவே, இஸ்லாத்தின் எழுச்சியுடன் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எது எவ்வாறாயினும் யாழ்ப்பாணத்தில் இஸ்லாமியர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் எங்கு, எப்போது ஏற்பட்டன என்பன தொடர்பாக வரலாற்று ஆசிரியர்களிடையிலே ஒருமித்த கருத்துக்கள் காணப்படவில்லை. இவர்கள் இலங்கையில் தனியானதொரு இனக்குழுவாகக் காணப்பட்டாலும்கூடப் பெருமளவிற்குத் தமிழையே தமது தாய் மொழியாகக் கொண்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. அவ்வாறே இம்மக்களது, பண்பாடு, வாழ்க்கை முறைகள், கலை என்பவைகள் தனித்துவம் வாய்ந்ததாகவும் முற்றிலும் ஏனையவர்களது பண்பாடுகளிலிருந்து மாறுபட்டவையாகவும் அமைந்திருக்கின்றது. இருப்பினும் யாழ்ப்பாணக் குடாநாட்டினைப் பொறுத்த வரையில் இவர்கள் சில விடயங்கள் பொறுத்து அப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களது பண்பாட்டுக்குள் உள்வாங்கிய நிலையில் காணப்படுவதனையும் மறுக்க முடியாது.

யாழ்ப்பாணத்தில் இஸ்லாமியர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் தொடர்பாக வரலாற்று ஆசிரியர்களிடையிலே முரண்பட்ட கருத்துக்கள் காணப்பட்டபோதும் கி.பி 13ஆம் நூற்றாண்டு காலமான யாழ்ப்பாணத்தரசர்களது காலத்துடன்தான் இவர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் அதிகளவிற்கு நல்லூரினை அண்டிய பிரதேசங்களில் காணப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அதாவது யாழ்ப்பாணப் பிரதேசத்து மக்களாக அவர்கள் வாழத் தொடங்கியமைக்கான ஆதாரமானது யாழ்ப்பாணத் தமிழ் அரசரது காலமான மேற்கூறப்பட்ட காலமே என்பது குறிப்பிடத்தக்கது. இதனை இக்கால இலக்கியங்கள் மற்றும் போர்த்துக்கேயரது ஆவணங்கள் என்பன நிரூபிக்கின்றன.*(ஞரநலசழணஇ குநசயெழ னுந.இ1930)* இவை இஸ்லாமியர்களது குடியேற்றங்கள் இக்காலப்பகுதியில் மிருசுவில், சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், நல்லூர், அலுப்பாந்தி, பருத்தித்துறை, ஆனைக்கோட்டை ஆகிய பிரதேசங்களில் காணப்பட்டதாகக் கூறுகின்றன. அதேநேரத்தில்

பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் போன்றவர்கள் கி.பி 8ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையிலும் யாழ்ப்பாணத்திலும் சில இஸ்லாமியக் குடியேற்றங்கள் காணப்பட்டதை கைலாயமாலை மற்றும் வையாபாடல் போன்ற இலக்கியங்களை ஆதராமாகக்கொண்டு குறிப்பிடுகின்றதனையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். *(சிற்றம்பலம், சி.க., 1992), (சபாநாதன்,குல., 1949),(நடராசா.க.செ.,1980)* இத்தகையத் தகவல்கள் எல்லாமே இஸ்லாமிய மக்களது எழுத்தியல்களாக அமையாது தமிழ் மக்களது எழுத்தாதரங்களிலிருந்தே கிடைத்துள்ளன. ஏனெனில் துரதிஸ்டவசமாக பின்வந்தவர்களுக்கு வழிகாட்டியாக இஸ்லாமியர்கள் தமது அக்கால யாழ்ப்பாண வரலாற்றினை அறிந்துகொள்ளுவதற்கு யாழ்ப்பாணத்தில் எந்தவிதமான இலக்கிய ஆதாரங்களையோ அல்லது தொல்லியல் மற்றும் கல்வெட்டு ஆதாரங்களையோ விட்டுச்செல்லவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

**வர்த்தக நடவடிக்கைகள்**

யாழ்ப்பாண அரசு காலத்தில் அதனது ஆட்சியாளர்கள் மேற்கொண்டிருந்த வர்த்தகத்தினை உள்நாட்டு. வெளிநாட்டு வர்த்தகமென இருவகைப்படுத்தலாம். அதிலும் அது கொண்டிருந்த வெளிநாட்டு வர்த்தகத்தினை இரண்டு பிரிவுகளாக வகுத்து நோக்க முடியும். ஒன்று அது நாட்டுக்குள்ளேயே பிற இராச்சியங்களுடன் செய்துகொண்ட வர்த்தக நடவடிக்கைகள் மற்றையது தேசத்திற்கு வெளியே பிற நாடுகளுடன் செய்துவந்த வர்த்தக நடவடிக்கைகள். ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, கொழும்புத்துறை, மாதோட்டம், அரிப்பு, கச்சாய், முல்லைத்தீவு போன்ற துறைமுகங்கள் இவர்களது வர்த்தகச் செயற்பாடுகளுக்குப் பெருமளவிற்கு உதவி செய்தன. அவ்வகையில் இவற்றினுடாகவே இலங்கையின் கிழக்குப் பகுதிகள், தென்னிலங்கை மற்றும் தென்னிந்தியப் பகுதிகளுடன் யாழ்ப்பாண அரசு வர்த்தக உறவினைப் பேணியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இத்தகைய துறைமுகங்கள் தனியே யாழ்ப்பாண ஆட்சியாளர்களது தேவைகளுக்கு மட்டுமன்றிக் கண்டி இராச்சியமானது இவற்றினைப் பயன்படுத்தி தென்னிந்தியாவுடனும் தொடர்புகளைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது *(நித்தியானந்தம்,வி.,2033)* மேலும் யாழ்ப்பாண இராசதானியினை அண்மித்தவகையில் கொழும்புத்துறை துறைமுகம் காணப்பட்டதனால் அதனூடாக அக்காலப்பகுதியில் வன்னியுடன் தொடர்புகளை இலகுவாக ஏற்படுத்தக்கூடியதாகவும் இருந்தது. இஸ்லாமியர்களைப் பொறுத்தவரை இவர்கள் முழுக்க முழுக்க வர்த்தகத்தினையே பிரதான இலக்காகக் கொண்டிருந்தமையினால் அவர்களது நடமாட்டங்களும் குடியிருப்புக்களும் முக்கியமான வர்த்தக நிலையங்களை அண்மித்த வகையில் காணப்பட்டிருந்தது.

பொதுவாகவே இஸ்லாமியர்களுக்கும் வர்த்தகத்திற்கும் இடையிலே நெருக்கமான உறவு காணப்படுகின்றது. அவ்வகையில் ஐரோப்பியர்களது இலங்கை வருகைக்கு முன்னரான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் சரி அல்லது இலங்கை முழுவதிலும் என்றாலும் சரி

வர்த்தகத்தில் செல்வாக்குப் பெற்ற பிரிவினர்களாகவே இவர்கள் இருந்து வந்துள்ளனர். குறிப்பாகச் சொல்லப்போனால் யாழ்ப்பாணத்தினது பொருளாதார நடவடிக்கையில் இவர்களது பங்களிப்பினை அக்காலப்பகுதியில் குறைத்து மதிப்பிட முடியாது. யாழ்ப்பாணத்தரசர்களது காலத்தில் அவர்களது மேற்பார்வையில் உள்நாட்டு வர்த்தகமும், வெளிநாட்டு வர்த்தகமும் இவர்களது கைகளிலேயே காணப்பட்டது. இவர்கள் யாழ்ப்பாணத்து அரசர்களது அந்தரங்கச் செயலாளர்களாகவும், படை வீரர்களாகவும், வைத்தியர்களாகவும்கூட இருந்துள்ளனர். *(சிற்றம்பலம்,சி.க.,1992)* யாழ்ப்பாணத்தில் இவர்களது வர்த்தக நடவடிக்கைகள் யானை வர்த்தகம், முத்து வர்த்தகம், வாசனைப் பொருட்களின் வியாபாரம் போன்றவற்றினை உள்ளடக்கிய வகையில் காணப்பட்டமை அவதானிக்கத்தக்கது.

பொதுவாக இஸ்லாமியர்கள் என்றாலே வர்த்தகர்கள், வியாபாரிகள் என்ற சிந்தனைகளே எல்லோர் மத்தியிலும் ஏற்படும். அவ்வகையில் ஐரோப்பியர்களது வருகைக்கு முன்னரான காலப்பகுதியில் இவர்கள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் பல வகையான தொழில்களை மேற்கொண்டு வந்ததுடன் அத்தகைய தொழில்களில் சிறப்புத் தேர்ச்சியினையும் பெற்றிருந்தனர். சிலர் விவசாயிகளாகவும், மீனவத்தொழிலை மேற்கொண்டும் வந்தனர். ஐரோப்பியர்களிடமிருந்து பாதுகாப்பினை பெறுகின்ற நோக்கத்துடன் கண்டிக்குச் சென்ற இவர்கள் வாசனைத் திரவிய வியாபாரத்திலும் ஈடுபட்டனர். இஸ்லாமியர்களில் சிலர் பொதி சுமக்கின்ற மாடுகளுடன் கண்டி உள்ளிட்ட நீண்ட தூரத்திற்குப் பயணத்தினை மேற்கொண்டு வியாபாரத்தினை மேற்கொண்டு வந்தனர்.*(பத்மநாதன், சி.,2001)*

**யானை வர்த்தகம்**

ஐரோப்பியர்களது வருகைக்கு முற்பட்ட காலப்பகுதியில் மத்திய மாகாணம், வன்னி, மன்னார் போன்ற பகுதிகளில் இஸ்லாமியர்கள் யானைகளைப் பிடிப்பதிலும் அவற்றினை விநியோகம் செய்வதிலும் அவற்றினைக் கொண்டு வேலை வாங்குவதிலும் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் பலர் பாரம்பரியமாகவே இத்தொழிலில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது நுட்பமான தொழிலும்கூட. இவர்கள் யானைகளைப் பழக்கிய பின்னர் அரசாங்கத்துக்கோ அல்லது பிற நாடுகளுக்கோ அவற்றினை விநியோகம் செய்தனர். அக்காலப்பகுதியில் ஊர்காவற்றுறை. பருத்தித்துறை, மன்னார் போன்ற துறைமுகங்களின் ஊடாகவே வெளிநாடுகளுக்கு இவர்களால் யானைகள் அனுப்பப்பட்டன. பதிலுக்கு குதிரைகளைக் கொடுத்து யானைகளைப் பண்டமாற்றுச் செய்கின்ற வியாபாரத்திலும் இவர்கள் ஈடுபட்டனர். சில பிரதேசங்களில் இவர்கள் அங்கு வாழ்ந்த தமிழ் மக்களுடன் இணைந்த வகையிலேதான் தமது யானை வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்க வேண்டும். ஏனெனில் சமகாலத்தில் வன்னிப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் யானைகளைப் பிடித்துப் பிற பகுதிகளுக்கு அனுப்பியமைக்கான ஆதாரங்களும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற ஊர்ப்பெயர்களான ஆனையிறவு, ஆனைப்பந்தி, ஆனைப்பாலம், ஆனைக்கோட்டை போன்றன இப்பின்னணியில் உருவான சில பெயர்களே. ஆனைப்பந்தி யானைகளை கட்டி வைக்கின்ற இடமாகவும், ஆனையிறவு யானைகள் வன்னியிலிருந்து

கொண்டு வரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் வரி பெறுகின்ற இடமாகவும், ஆனைப்பாலம் யானைகளை ஏற்றுமதி செய்கின்ற பகுதியாகவும் வரலாற்றில் பேசப்படுகின்றது. *(அருந்தவராஜா.க.,2012)*

யாழ்ப்பாண அரசுகால வருமான மூலங்களில் யானை வர்த்தகமென்பது பிரதான இடத்தினைப் பெற்றிருந்தது. இக்கால அரசர்கள் மக்கள்மீது நிலவரி, தலைவரி, அதிகாரிவரி, இனவரி போன்ற பல்வேறு வகையான வரிகளை விதித்தும் முத்துக்குளித்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலமாக அதிகளவான வருவாயினைப் பெற்றபோதும்கூட அக்காலப்பகுதியில் யானை வர்த்தகமென்பது இவர்களது வருமான மூலங்களில் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்திருந்து. அரசர்களது தனியுரிமையாகக் காணப்பட்ட யானை வரத்தகத்திற்கு குறிக்கப்பட்ட பருவம் என்பது கிடையாது. எக்காலத்திலும் இத்தகைய யானை வர்த்தகத்தின் மூலமாக யாழ்ப்பாண அரசர்களுக்கு வருவாய் கிடைத்த வண்ணமே இருந்தது.
.

இவ்வாறு சிறப்பாக நடைபெற்ற யானை வர்த்தகத்தில் இஸ்லாமியர்களுடன் வன்னியர்கள் எனப்பட்ட வன்னிப் பகுதிகளில் வாழ்ந்தவர்களது பங்கானது குறிப்பிடத்தக்கவகையில் அமைந்திருந்ததெனலாம். தற்காலத்தில் இப்பகுதிகள் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியப பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. உண்மையில் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு வருவாயினைப் பெற்றுத் தந்த மூலங்களில் யானை வர்த்தகமென்பது பிரதானஇடத்தினைப் பெற்றிருந்தாலும்கூட யாழ்ப்பாண நகரத்திற்கு வெகு தொலைவில் காணப்பட்ட வன்னிப் பிரதேசங்களிலிருந்தே இவை அதிகளவில் கிடைத்தன. இருப்பினும் இவர்கள் வாழ்ந்த பகுதியின் பூர்வீக வரலாறானது பெருமளவிற்குத் தொல்லியல் ஆதாரங்களை நம்பியதாகவே உள்ளது. இவர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளுக்கு வருடா வருடம் வரிசை கட்டியதாகவும் போர்த்துக்கேயர்களது படையெடுப்புக்கள் யாழ்ப்பாணம் நோக்கி நடைபெற்ற சமயங்களில் முள்ளியவளை, பனங்காமம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வன்னியர்கள் யாழ்ப்பாண இராச்சியத்திற்குப் படை உதவிகளை அளித்தாதகவும் தகவல்கள் காணப்படுகின்றன(*பத்மநாதன்,சி.,2014).* வன்னிப் பிரதேசமானது அதிக காடுகளைக் கொண்ட பகுதிகளாகவும் அதேநேரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து தொலைவில் காணப்பட்டதனாலும் அதனை போர்த்துக்கேயர், ஒல்லாந்தரது காலங்களில் அவர்களால் நேரடியாக நிர்வகிக்க முடியவில்லை. இஸ்லாமியர்களைப் போன்றே வன்னியர்களும் யானைகளைப் பிடிப்பதற்கென்றே சிறப்பாகப் பயிற்சி பெற்றவர்களாக விளங்கினர். இங்கிருந்த சிற்றரசர்கள் பலர் யானைகளைப் பிடித்து அவற்றினை இஸ்லாமியர்களின் ஊடாக அரசர்களுக்குத் திறையாகக் கொடுத்தனர். குறிப்பாக அடங்காப்பற்று வன்னியர்களிடமிருந்து யாழ்ப்பாண அரசர்கள் திறையாகக் காலத்திற்குக்காலம் யானைகளைப் பெற்றதாகப் பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிடுகின்றார்(*பத்மநாதன்,சி.,2011*). இத்தகைய வன்னியர்களுடன் தொடர்புகளை வைத்திருந்த இஸ்லாமியர்களில சிலர்

அவர்களுக்கும் யாழ்ப்பாண அரசர்களுக்கும் இடையிலே இவ்வியாபாரம் பொறுத்து இணைப்புப் பாலமாகவும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

திறையாகப் பெற்ற யானைகளை அரசன் பின்னர் தென்னிந்தியா உள்ளிட்ட பிற நாடுகளுக்கு விற்பனை செய்வதன் மூலமாக நன்மையடைந்தான். குறிப்பாகத் தென்னியாவிற்கே இவை அதிகளவில் அனுப்பப்பட்டன. சமகாலத்தில் காணப்பட்ட தென்னிந்திய அரசுகளிலும் வங்காளத்திலும் இவை போர்களுக்கே அதிகளவில் பயன்படுத்தப்பட்டன. இருப்பினும் இவற்றினை விடவும் பிற தேவைகளின் நிமித்தமாகவும் யானைகள் பழக்கியெடுக்கப்பட்டன. பாரங்களைத் தூக்குவதற்கும் அவற்றினை இழுப்பதற்கும் யானைகள் பயன்படுத்தப்பட்டன. இத்தகைய முயற்சிகளில் அரசருக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களில் அனேகர் இஸ்லாமியர்களே. ஆலயங்களிலும் மக்களது வழிபாட்டிற்காகவும் ஒரு மத நம்பிக்கைக்குரிய சின்னமாகவும் யானைகள் காட்சிப்படுத்தப்பட்டன. அரண்மனைகளிலும் பிரதானிகளது மாளிகைகளிலும் யானைகள் வைத்துப் பராமரிக்கப்பட்டதுடன் அரசர்கள் வைபவ ரீதியாக உலாச் செல்கின்ற சமயங்களில் அவற்றினை தம்முடன் கூடவே அழைத்துச் செல்லுகின்ற பழக்கமும் காணப்பட்டது.*(சிவசாமி,வி.,2014)* அதாவது சமகாலத்தில் யானைகள் மங்கலப் பொருளாக அவர்களால் மதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விஜயநகர அரசிலும், பாமினி அரசிலும் ஈழத்து யானைகள் விரும்பிப் பயன்படுத்தபட்டதாக பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா குறிப்பிடுகின்றார்.*(கிருஸ்ணராஜா,செ.,2000)* மேலும் விஜயநகர அரசில் மட்டும் 8000 யானைகள் காணப்பட்டதாகத் தொடர்ந்து அவர் கூறுகின்றார். சோழமண்டலக் கரையிலிருந்தும் வங்காளத்திலிருந்தும் யாழ்ப்பாணம் வருகின்ற இஸ்லாமிய வர்த்தகர்கள் வன்னியிலிருந்து பிடித்து வரப்பட்ட யானைகளை யாழ்ப்பாண அரசர்களிடம் கொள்வனவு செய்து அவற்றினைப பெரும்பாலும் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தினூடாகவே அனுப்பியிருந்தமைக்கான குறிப்புக்கள் உள்ளன. இவ்வாறு இவர்கள் இலங்கை வருகின்ற சமயத்தில் தங்களது கப்பல்களில் நெல், அரிசி என்பனவற்றினையும் கூடவே கொண்டுவந்தனர். இவர்களிடமிருந்து இவற்றினை யாழ்ப்பாணத்தரசர்கள் விரும்பிக் கொள்வனவு செய்தனர். காரணம் யாழ்ப்பாண இராச்சியமானது அக்காலப்பகுதியில் மழையினை நம்பியே விவசாயத்தினை மேற்கொண்ட பிரதேசமாகக் காணப்பட்டதனால் அரிசிக்கு அதிகளவில் இங்கு தட்டுப்பாடு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு யாழ்ப்பாண அரசர்களது பிரதான பொருளாதார மூலங்களிலொன்றாகக் காணப்பட்ட யானை வரத்தகத்தில் இஸ்லாமியர்கள் தனித்தும பல சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களுடன் இணைந்த வகையிலும் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**முத்துக்குளித்தல், வர்த்தகம்**

யாழ்ப்பாணத்தில் இஸ்லாமிய மக்களது பொருளாதார நடவடிக்கையில் முத்துக்குளித்தல் மற்றும் முத்து வர்த்தகம் என்பன ஆரம்ப காலங்களிலிருந்தே பிரதான இடத்தினைப் பெற்றிருந்தாலும் யாழ்ப்பாண அரசர்களது காலத்திலிருந்துதான் இவை பிரபல்யம்

அடைவதனைச் சான்றுகள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமன்றி இஸ்லாமிய மக்களது மற்றொரு பாரம்பரியத் தொழிலாகவும் இதனைக் கருதலாம். இவர்கள் முத்துக்குளிப்பவர்களாகவும் படகோட்டிகளாகவும் விளங்கிய அதேநேரத்தில் விற்பனையாளராகவும் திகழ்ந்திருந்தனர்.

முத்துக் குளிப்பிற்கு வடஇலங்கையின் மன்னார் பிரேதசமானது பெயர் பெற்ற பிரதேசமாகக் காணப்பட்டது. இப்பகுதிகளில் பெருமளவு முத்துச்சிப்பிகள் விளைந்தன. இவை உள்நாட்டவர்களால் மட்டுமன்றிப் பிற நாடுகளினால் அழகுசாதனப் பொருள் என்ற அடிப்படையில் விரும்பிக் கொள்வனவு செய்யப்பட்டன. 14ஆம் நூற்றாண்டளவில் இத்தகைய முத்துக்குளிப்பின் மூலமாக யாழ்ப்பாண அரசர்கள் அதிகளவான வருவாயினைப் பெற்றுக் கொண்டனர். மன்னார் பகுதிகள் மட்டுமன்றி வடஇலங்கையில் காணப்பட்ட தீவுப்பகுதிகளிலும் அக்காலப்பகுதியில் ஏராளமான முத்துக்கள் விளைந்தன. குறிப்பாக நயினாதீவுப் பிரதேசத்தில் இஸ்லாமியர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் பல இப்பகுதியில் நடைபெற்ற முத்துக்குளிப்புடன் இணைக்கப்பட்டே பேசப்படுகின்றது. அதாவது முத்துக்குளிக்கின்ற நோக்கத்துடன் வந்த இஸ்லாமியர்களில் பலர் அக்காலப்பகுதியில் அங்கு வாழ்ந்த தமிழ் பெண்களைத் திருமணம் செய்ததன் மூலமாக இப்பகுதிகளில் குடியேறி நிரந்தரமாக வாழந்ததாகச் செவி வழியான கதையொன்று அத்தீவினது இஸ்லாமியர்களது வரலாற்றில் காணப்படுகின்றது. அவர்களது வழிவந்த கேரளத்து இஸ்லாமியர்களே தற்போதும் நயினாதீவில் வாழ்ந்து வருகின்றனர்.*(அருந்தவராஜா,க.,2012)*

14ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக்கு வந்த ஜோர்தனஸ் என்பவர் சுமார் 8000 படகுகள் வரை முத்துக்குளிப்பில் ஈடுபட்டதாகக் கூறுகின்றார். இபன்பட்டுட்டா என்ற யாத்தீரிகன் கடலில் கிடைத்த முத்துச்சிப்பிகளை சிலர் வெயிலில் காயப்போட்டதனைக் கண்டதாகக் கூறுகின்றார். சிலர் அவற்றினது தரத்திற்கேற்றவாறு வகைப்படுத்தியிருந்தனர். இபன்பற்றுட்டாவிடம் ஆரியச்சக்கரவர்த்தி சில முத்துக்களைக் காண்பித்து அவை பற்றியும் விசாரித்ததாக அவரது குறிப்புக்கள் கூறுகின்றன. சித்திரை, வைகாசி மாதங்களில் முத்துக்குளித்தல் மற்றும் முத்து வர்த்தகம் என்பன மன்னார் கடலில் அதிகளவில் நடைபெற்றது. அது நடைபெறுகின்ற காலங்களில் பாதுகாப்பிற்குப் படைகளும் அரச அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர். அதன் பொருட்டுச் சிறிய குடிசைகளும் ஏற்கனவே இவற்றக்காக அமைக்கப்பட்டிருந்த கட்டடங்களும் பயன்படுத்தப்பட்டன. இப்பகுதியில் கூடுகின்றவர்களுக்கு நீர் வசதியினைச் செய்வதற்காக இப்பகுதியில் காணப்பட்ட குளங்கள் சுத்தமாக்கப்பட்டன. உணவு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. *(பத்மநாதன்,சி.,2001)*

13ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் காணப்பட்ட காயல்பட்டணம் சிறந்த துறைமுகமாகக் காணப்பட்டது. மன்னார்க் கடலிலிருந்து பெறப்பட்ட முத்துக்களில் அதிகமானவை அங்குதான் விற்பனை செய்யப்பட்டன. பின்னர் அங்கிருந்து முத்துக்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டன. 14ஆம் நூற்றாண்டில் மாலையாளக்கரையில் யூர் பட்டணம் என்ற துறைமுகமானது முதன்மையான துறைமுகமாகக் காணப்பட்டது. (*கிருஸ்ணராசா, செ., 2002)* மன்னாரிலிருந்தும் பிற இடங்கள் பலவற்றிலிருந்தும் வணிகர்கள் முத்துக்களைச்

சேகரித்துக்கொண்டு அத்துறைமுகத்திலே விற்பனை செய்தனர். முத்துக்குளித்தல் நடைபெறுகின்ற காலங்களைத் தவிர ஏனைய காலங்களில் சங்கு குளித்தல் இப்பகுதிகளில் நடைபெற்று வந்தது. இதனால் சங்குகளும் யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதியாயின. வங்களாத்திலே இவை அதிகளவில் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாகச் சமய விழாக்களுக்கு இவற்றினது தேவையானது அதிகளவில் காணப்பட்டது. *(கிருஸ்ணராசா, செ., 2002)*

இக்காலப்பகுதியில் தமிழ்-இஸ்லாமிய இனத்தவர்கள் போட்டி போட்டுக்கொண்டு இவ்வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தபோதும்கூட அவர்களுக்கிடையிலே இவ்விடயமாகப் பாரியளவில் முரண்பாடுகள் எதுவும் ஏற்பட்டதாகக் குறிப்புக்கள் எவையும் இல்லை. இவற்றினைவிட ஏனைய சிறிய தொழில் முயற்சிகளிலும் இவர்கள் ஒற்றுமையுடன் ஈடுபட்டே வந்தனர். அக்காலப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகள் யாவும் தமிழ் ஆட்சியாளர்களான ஆரியச்சக்கரவர்த்திகளது பொறுப்பில் காணப்பட்டதனால் இஸ்லாமிய மக்கள் அவர்களுக்கு குறிக்கப்பட்டளவு வரியினைச் செலுத்துவதன் மூலமாகவே தமது வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டியவர்களாகக் காணப்பட்டனர். அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட துறைமுகங்களைப் பயன்படுத்திய இஸ்லாமியர்கள் வரியாகவோ அல்லது கப்பமாகவோ பொருட்களையோ அல்லது பணத்தினையோ செலுத்த வேண்டியிருந்தது. இதற்காகச் சுங்கவரியினைச் சேகரிக்கின்ற நிலையங்களும்கூட முத்துக்குளிப்பு நடைபெறுகின்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (*Pathmanathan,S.,2011*)

**பிற பொருளாதார நடவடிக்கைகள்**

இஸ்லாமிய மக்கள் யாழ்ப்பாண அரசு காலத்தில் வர்த்தக நடவடிக்கைகள் தவிர பிற பொருளாதார நடவடிக்கைள் சிலவற்றிலும் ஈடுபட்டு யாழ்ப்பாண அரசினது வருவாய்க்குப் பக்கபலமாக இருந்தனர். குறிப்பாக யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் அவர்கள் மீனவத் தொழிலிலும் ஈடுபட்டதனைச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக கரையோரப் பகுதிகளான நவாந்துறை, நயினாதீவு, பருத்தித்தறை, வேலணை போன்ற பகுதிகளில் வாழ்ந்தவர்கள் சிலர் தங்களது வாழ்வாதாரத்திற்காக மீனவத்தொழிலை மேற்கொண்டு வந்தனர். இதன் மூலமாக அதிகளவான வருவாயினையும் பெற்றனர். இருப்பினும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வறியவர்களாகவே காணப்பட்டனர். சிலர் வன்னிப் பகுதியில் விவசாயத்திலும் ஈடுபட்டனர். *(Silva,K.M.De.,1981)* கோடை காலங்களில் சிறுதானியங்கள் இவர்களால் செய்கை பண்ணப்பட்டன.

சாயவேர் உற்பத்தி, தயாரித்தல் என்பனவற்றிலும் முஸ்லிம்கள் சிலர் ஈடுபட்டனர். யாழ்ப்பாண அரசு காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டுப் பிற நாடுகளுக்கு ஏற்றமதி செய்யப்பட்ட பொருட்களில் சாயவேரும் ஒன்று.*(பத்மநாதன்,சி.,2001)* சாயம் காய்ச்சுதலும் குடிசைக் கைத்தொழில்களிலொன்றாக சில இஸ்லாமியர்களினால் மேற்கொள்ளப்பட்டன. நெசவுக் கைத்தொழிலும் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் நடைபெற்ற வந்தாலும் யாழ்ப்பாணத்தினது முழுமையான தேவைகளையும் இதன் மூலமாகக் கிடைக்கின்ற உற்பத்தி போதுமானதாக

அமையவில்லை. இஸ்லாமியர்களது பங்கானது இக்கைத்தொழில் பொறுத்துக் குறைவாகவே காணப்பட்டது. இருப்பினும் முடிவுப் பொருட்களை மலையகம் உள்ளிட்ட பிற பகுதிகளுக்கு கொண்டு சென்று சேர்ப்பதில் இவர்களது பங்களிப்பு அதிகளவில் காணப்பட்டதென்றே கூறுதல் வேண்டும்.

பாக்கு, வாசனைப் பொருட்கள் போன்றவற்றினை அவர்களுக்குச் சொந்தமான சம்மன்களில் இந்தியத் துறைமுகங்களுக்கு எடுத்துச்சென்றனர். பருத்தித்துணிகள், புடவை, அரிசி, கருவாடு போன்றன அவற்றில் ஏற்றிவரப்பட்டன.*(பத்மநாதன்,சி.,2001)* பொதுவாக அக்காலப்பகுதியில் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் யாவுமே இவர்களது பொறுப்பிலேயே காணப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த இஸ்லாமியர்களில் சிலர் கண்டியில் நடைபெற்ற வர்த்தகத்திற்குப் பங்களிப்பினை வழங்கியிருந்தனர். கண்டியில் வாழ்ந்த இஸ்லாமியர்கள் சிலரும் பொதி சுமக்கின்ற மாடுகளுடன் யாழ்ப்பாணம் வந்து வர்த்தகத்திலீடுபட்டதாகக் குறிப்புக்கள் உள்ளன. தையல் தொழில், சப்பாத்துத் தைக்கின்ற தொழில், இறைச்சி வியாபாரம் போன்ற தொழில்களிலும் அக்காலப்பகுதியில் இஸ்லாமியர்கள் ஈடுபட்டனர்.

## முடிவுரை

இலங்கையில் இஸ்லாமியர்களது பொருளாதார நடவடிக்கைகளில் வர்த்தகமே பிரதான இடத்தினைப் பெற்றிருந்தது. அதிலும் யாழ்ப்பாண அரசர்கால யாழ்ப்பாணப் பிரதேசத்தினைப் பொறுத்தவரையில் யானை வர்த்தகமும் முத்துக் குளித்தல் மற்றும் முத்து வர்த்தகம் என்பனவுமே அவற்றில் பிரதான பங்கினை வகித்திருந்தது. இத்தகைய வர்த்தக நடவடிக்கைகளை அவர்கள் இப்பிரதேசத்தில் வாழ்ந்தகொண்டிருந்த தமிழ் மக்களுடன் இணைந்தவகையிலெதான் மேற்கொண்டிருந்தனர். இவற்றின் மூலமாக அதிகளவான வருவாயினை இவர்கள் பெற்றதுடன் அரசிற்கும் கப்பம் மற்றம் வரிகளின் மூலமாக அதிகளவான வருவாய் கிடைத்தது. அவ்வகையில் அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணஅரசர்களின் கட்டுப்பாட்டின்கீழ் காணப்பட்ட இத்தகைய வர்த்தக நடவடிக்கைகளை அவர்களது அனுமதியினைப் பெற்றே இவர்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

## உசாத்துணை நூல்கள்


அருந்தவராஜா,க., (2012), *யாழ்ப்பாண முஸ்லிம்கள்,* அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.

கிருஸ்ணராஜா, செ., (2002), *இலங்கை வரலாறு,* பாகம் 2, பிறைநிலா வெளியீடு, கோண்டாவில்.

கிருஸ்ணராஜா, செ., (1998), *யாழ்ப்பாணத் தமிழரது தொல்லியல் கலாசாரப் பழமை*, பிறைநிலா வெளியீடு, கோண்டாவில்.

சபாநாதன்,குல.,(ப.ஆ), (1949), *யாழ்ப்பாண வைபவமாலை,* சுன்னாகம்.

சிவசாமி.வி.,(1990), *தீவகம் - ஒரு வரலாற்றுப் பார்வை,* யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

சிவசாமி, வி., “யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர்கால நிர்வாக முறைகள்“, *இலங்கை வரலாறு (கட்டுரைகளின் தொகுப்பு),* அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.

7.சிற்றம்பலம், சி.க.,(1992), "சமயம்", *யாழ்ப்பாண இராச்சியம்,* (ப.ஆ.சிற்றம்பலம். சி.க.,), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

நடராசா, க.செ., (ப.ஆ), (1980), *வையாபாடல்,* கொழும்பு.

நித்தியானந்தம், வி., (2003), *இலங்கையின் பொருளாதார வரலாறு,* மேசி பல்கலைக்கழகம், நியுசிலாந்து.

பத்மநாதன், சி., (2014), " அடங்காப்பற்று வன்னிமைகள்", *வன்னி - வரலாறும் கலாசாரமும்,* குமரன் வெளியீடு, சென்னை.

பத்மநாதன், சி., (2001), *இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்*, குமரன் பதிப்பகம், சென்னை-கொழும்பு.

Pathmanathan,S.,(2011), *Kingdom of Jaffna(A Concise History),* (Tamil), Kumaran Book House, Colombo.

Silva,K.M.De., (1981), *A History of Sri Lanka,* Oxford University press, Delhi.

Queyroz, Fernao De., (1930), *The Temporal and Spiritual Conquest of Ceylon*, trans. Perera,S.G, Colombo.